வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 20.09.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா தற்சார்புடன் உலக நாடுகளிடையே வலிமையாக இருப்பதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கும் விதமாக ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக,மின்னனு சாதனங்கள் விலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட உள்ளன.

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி, புதுச்சேரி கடற்கரையில் துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன் தூய்மை பணியை தொடங்கி வைத்தார்.

*பிரதமர்-குஜராத்* (16)

இந்தியா தற்சார்புடன் உலக நாடுகளிடையே வலிமையாக இருப்பதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். இன்று குஜராத் மாநிலம் பாவ் நகரில் நடைபெற்ற சமுத்ரா சே சம்ருத்தி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது 32 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, 7 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான முக்கிய கடல் சார் திட்டங்களை திறந்து வைத்தார். தொடர்ந்து , 2047 ஆம் ஆண்டிற்குள் நமது கடல் சார் வர்த்தகம் மும் மடங்காக அதிகரிக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை

வெளியிட்டார். நம் நாட்டின் கடலோர பகுதிகள் எதிர்கால தேச வளர்ச்சியின் திறவுகோளாக விளங்கும் எனவும், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் கடல் சார் பிரிவுகள் வளர்ச்சி பெற்று, கடல் வளம் பெருமளவு பெருகும் எனவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது, மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் பேசுகையில், கடந்த 11 ஆண்டுகளில் துறைமுகம் சார்ந்த துறைகளில் பிரமாண்ட வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

*நிர்மலாசீதாராமன்* (14)

நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கும் விதமாக ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கங்களின் நூற்றாண்டு விழாவில் இன்று அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது, 2047 ஆம் ஆண்டிற்குள் விக்சித் பாரத் என்ற நீண்ட கால இலக்கை முன்னெடுத்து செயல்படுவதாகவும், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என அவர் கூறினார். இம்மாதம் 22 ஆம் தேதி முதல் பொதுமக்கள் குறைந்த விலையில் பொருட்களை வாங்க ஏதுவாக ஜிஎஸ்டி சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளதாகவும், 375 பொருட்களுக்கு வரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளதால் வரவிருக்கும் பண்டிகைகளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம் என மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

*ராஜ்நாத் சிங்* (5)

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 2 நாள் அரசு முறை பயணமாக இன்று மொராக்கோ செல்கிறார். சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், தளவாட உற்பத்தியில் இரு நாடுகளுக்கு இடையேயான

ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

சேவா சப்தாஹ்-ஆயுஷ்மான் பாரத்-1 (6)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. நாடு முழுவதும் பொதுமக்களுக்கு தரமான சுகாதார சேவையை வழங்கி வரும் ஆயுஷ்மான் பாரத் குறித்து இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்-ஆயுஷ்மான் பாரத்*-2 (10)

கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இந்தியாவின் சுகாதார அமைப்பு ஆழமான மற்றும் சிறப்பான பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. கடந்த 2018 ல் தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா உலகின் மிகப் பெரிய சுகாதார காப்பீடு திட்டமாகும். ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கும் இந்த திட்டம், 12 கோடி குடும்பங்களுக்கு, மொத்தத்தில் 55 கோடி மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டமாக விளங்கி வருகிறது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி 70 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பயனளிக்கும் விதமாக ஆயுஷ்மான் வயவந்தனா யோஜனா- திட்டத்தை அறிவித்தார்.

**(மோடி வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்-ஆயுஷ்மான் பாரத்-* 3 (8)

ஆதார் அட்டை மூலம் எளிதில் பதிவு செய்யக் கூடிய இந்த திட்டத்தால் முதியோர்களுக்கு சுகாதாரம் தொடர்பான சேவைகளை எளிதாக பெற முடிகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ், சப்கா பிரயாஸ் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தி ஒருங்கிணைந்த சுகாதார சூழலை அரசு வெற்றிகரமாக இத்திட்டத்தின் மூலம் உருவாக்கி உள்ளது குறிப்பிடத் தக்கது.

இத்திட்டத்தினால் பயனடைந்த புதுச்சேரி அரியாங்குப்பம் பகுதியை சேர்ந்த பயனாளி குமார் எமது செய்தியாளரிடம் பேசுகையில்.......

(வாய்ஸ் குமார்)

*புதுச்சேரி சுகாதாரத் துறை* (10)

புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை காரணமாக பரவக் கூடிய நோய்களை தடுக்கும் நடவடிக்கைகள் குறித்து புதுச்சேரி அரசு சுகாதார மற்றும் நலவழித் துறை சார்பாக கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. அதன்படி, டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவக் கூடிய நோய்களை தடுக்க நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மழைக் காலங்களில் குடிநீரை காய்ச்சிய பின் அருந்த வலியுறுத்துவது, வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அடிக்கடி ஓஆர்எஸ் கொடுக்க அறிவுறுத்துவது உள்ளிட்ட வழிமுறைகள் பின்பற்றப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஜிஎஸ்டி- மின்னனு சாதனங்கள்* – 1 (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. இதில் குறிப்பாக மின்னனு சாதன, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- மின்னனு சாதனங்கள்* – 2 (16)

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திரமோடியின் அறிவிப்பிற்கு ஏற்ப சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் நாளை மறுநாள் முதல் நடைமுறைக்கு வரும் நிலையில், மக்களின் சுமையை குறைக்கும் வகையில் மின்னனு சாதனங்கள் பிரிவில் பல்வேறு பொருட்களுக்கான வரி குறைக்கப்பட்டுள்ளது. ஏசி, தொலைக்காட்சிப்பெட்டி உள்ளிட்ட பல மின்னனு சாதனங்களின் வரி 28 சதவிகித்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் வீட்டு உபயோக மின்னனு சாதனங்கள் வாங்கும் திறன் அதிகரிப்பதோடு, உள்நாட்டு உற்பத்தியாளர்களும் பயனடைவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. கம்போஸ்டிங் மிஷின் மீதான ஜிஎஸ்டி 12 சதவிகித்தல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், கழிவுகள் மேலாண்மை செய்வது மலிவாகும். அதேபோல், டூ வே ரேடியோ சாதனங்களுக்கான வரி சதவிகிதம் 12 லிருந்து 5 ஆக குறைக்கப்படுவதால், காவல் துறை, பாதுகாப்பு படை மற்றும் ராணுவ அமைப்புகளுக்கான கொள்முதல் செலவு இனி குறையும். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மின்னனு சாதனங்களின் விலையை குறைத்து, அதன் அணுகுமுறை மேம்பட இருப்பது குறிப்பிடத் தக்கது.

துணை நிலை ஆளுநர் (14)

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி, இந்திய கடலோர காவல்படை சார்பில் கடற்கரை தூய்மை பணி காந்தி சிலை அருகில் இன்று நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன் தூய்மை பணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுடன் சேர்ந்து கடற்கரை தூய்மை பணியில் ஈடுபட்டார். தூய்மை பணியில் ஏராளமான மாணவர்கள் பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு கடற்கரையை தூய்மை செய்தனர். இந்திய கடலோர காவல் படை வீரர்கள் ஹெலிகாப்டர் மற்றும் அடி நவீன ரோந்து படகுகள் மூலம் செய்த சாகச நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர். இதே போல் காரைக்காலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு ஏ எஸ் பி எஸ் ரவிபிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு தூங்மை பணியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி ஹெல்மெட் (6)

சேவா பக்வாடா 2025 -ன் ஒரு பகுதியாக சிபிசிஐடி காவல் துறையினர் பங்கேற்ற போதை பொருள் ஒழிப்பு மற்றும் ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி கடற்கரை சாலையில் நடைபெற்றது. கடற்கரை சாலையில் தொடங்கிய இருசக்கர வாகன பேரணி முக்கிய நகர வீதிகள் வழியாக சென்று மீண்டும் காந்தி சிலையில் நிறைவடைந்தது.

புரட்டாசி (7)

புரட்டாசி மாத முதல் சனிக்கிழமையை ஒட்டி, புதுச்சேரியில் உள்ள பல்வேறு பெருமாள் கோவில்களில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர். பிரசித்தி பெற்ற காந்தி வீதி வரதராஜ பெருமாள் கோவில், முதலியார்பேட்டை வன்னிய பெருமாள் கோவில், ராமகிருஷ்ணாநகர் லட்சுமி ஹயக்ரீவர் கோவில், முத்திரையர்பாளையம்

கோவிந்தன் கோவில், உள்ளிட்ட கோவில்களில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

ஏனாம்(7)

புதுச்சேரியின் பிராந்தியமான ஏனாமில், விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், பிட் இண்டியா சைக்கிள் பேரணியை புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவ் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் போது, மண்டல நிர்வாகி அன்கீத் குமார், விளையாட்டு ஆணைய நிர்வாகி உதயகுமார், மற்றும் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*புதுச்சேரி திரிசூல்* (5)

புதுச்சேரி வடக்கு பிரிவு காவல் நிலையங்களின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ரவுடிகளின் வீடுகளில் காவல் துறையினர் ஆபரேஷன் திரிசூல் எனும் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அப்பகுதியில் குற்றப்பின்னணி உள்ளவர்கள் யாரெனும் பதுங்கி உள்ளனரா? ஆயுதங்கள் பதுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் விசாரித்தனர்.

*வானிலை* (9)

தென்மேற்கு பருவமழை வடதமிழகத்தில் தீவிரமடைந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது

முதல் மிதமான மழை இன்று பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, நீலகிரி, தேனீ, விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை எதிர்பார்க்கப் படுகிறது.

விளையாட்டு (6)

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான் கீ ரெட்டி, சிராக் ஷெட்டி இணை மலேஷியா இணையுடன் மோத உள்ளது.

ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் சூப்பர் 4 சுற்றுகள் இன்று தொடங்குகின்றன. துபாயில் இரவு நடைபெறும் முதல் போட்டியில் பங்களாதேஷ் இலங்கை அணியை எதிர்கொள்கிறது.